**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 6**

**இறுதிப்பரீட்சை – 2020/2021 ( நிகழ்நிலை)**

**சர்வதேச மனித உரிமைகள் சட்டம் - LLU6717/LWU4325**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

---

திகதி : 8 செப்டெம்பர் 2021 நேரம்: பி.ப 1.00 - பி.ப 4.00

---

**அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும்.**

**இவ்வினாத்தாள் ஐந்து (05) வினாக்களைக் கொண்டுள்ளது. நீர் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். பகுதி (அ) இன் வினா இலக்கம் (1) கட்டாயமானது. பகுதி (ஆ) இலிருந்து மூன்று (03) வினாக்களைத் தெரிவு செய்யலாம்.**

## பகுதி – அ

1. (அ) செரண்டிப் என்பது பல்வேறு மதக்குழுக்களை உள்ளடக்கிய ஒரு நாடு ஆகும். அல்வினியன் எனும் ஒரு சிறுபான்மை மதக்குழு ஆனது ஒரு அல்வினியன் மரணிக்கும் போது , அவரது உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் எனும் மத நம்பிக்கையைக் கொண்டிருந்தது. இறந்த உடல்களிற்கு தகனமூட்டுவது அவர்களது மதக் கற்பித்தல்களிற்கு முரண்பாடானது ஆகும். கொவிட்- 19 தீவிர நோய் பரவலால் ஏற்பட்ட நாட்டின் மருத்துவ அவசர நிலையைத் தொடர்ந்து , இவ்வைரஸின் காரணமாக இறப்போரது உடல்களை அடக்கம் செய்வதை தடை செய்ய செரண்டிப் அரசாங்கம் தீர்மானித்தது. அடக்கங்களை தடை செய்வதை நடைமுறைப்படுத்தும் ஒழுங்குவிதி ஒன்றை சுகாதார அமைச்சு வெளியிட்டது. வைரஸ் தொடர்பான சகல தகவல்களும் கண்டறியப்படாது இருப்பதனால் , உடல்களை அடக்கம் செய்தல் ஆனது , நிலக்கீழ் நீர் வளத்தை மாசுபடுத்தும் ஆபத்தை ஏற்படுத்தலாம் என அரசாங்கம் தெரிவித்தது. அல்வினியன் சமூகத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் சமய மற்றும் அரசியல் தலைவர்கள் , அரசாங்கத்தின் வாதத்தை நியாயப்படுத்தும் விஞ்ஞான சான்றுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என வாதிட்டு இத்தீர்மானத்தை ஆட்சேபித்தன. உலகின் ஏனைய பிற நாடுகளில் , கொவிட்- 19 இனால் மரணிக்கும் உடல்களை, பொருத்தமான சுகாதார அறிவுறுத்தல்களிற்கு அமைய அடக்கம் செய்ய அனுமதிக்கப்படுவதை இவர்கள் சுட்டிக்காட்டினர். மேலும் , அல்வினியன்கள் தமது மத அடையாளம் காரணமாக இத்தீர்மானத்திற்கு இலக்காகியுள்ளதாக முறையிட்டனர்.

இவர்களது தீர்ப்புகளிற்கு சாதகமாக அரசாங்கம் பதிலளிக்காமையால் 'அல்வினியன் விடுதலை முன்னணி' (அ.வி.மு) எனும் அரசியல் குழு ஒன்று அரசாங்கத்தின் செயலை கண்டித்து ஆர்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தது. இவ் ஆர்பாட்டம் சமூகங்களிற்கிடையே மோதல்களை ஏற்படுத்தலாம் என்ற கணிப்பில் , ஆர்ப்பாட்டத்திற்கு முதல் நாள் , அரசாங்கம் பொது அவசரகாலநிலையை பிரகடனப்படுத்தியதுடன் , ஏதேனும் பொது கண்டனங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் என்பனவற்றை தடை செய்யும் ஒழுங்கு விதிகளை பிரசுரித்தது. ஆர்பாட்டத் தினத்தன்று , அன்றைய தினத்தில் எந்த ஆர்ப்பாட்டத்தையும் தடை செய்யும் தடை உத்தரவு ஒன்றை நீதவான் நீதிமன்றில் இருந்து பொலிசார் பெற்றனர். தடை உத்தரவை வழங்குவதில் நீதவான் அவசரகால ஒழுங்குவிதிகளை சார்ந்து செயற்பட்டார். அ.வி.மு ஆனது தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தது. ஆர்பாட்டத்தில் பொலிசார் தலையிட்ட போது ஆர்பாட்டங்களை தடை செய்யும் அவசரகால ஒழுங்குவிதிகள் அரசியலமைப்பால் இனம்காணப்பட்ட அவர்களது அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்துவதால் அவை சட்டமுரணானவை என்றும் , அவற்றை பின்பற்ற இயலாது என்றும் இக்குழுவின் தலைவர் தெரிவித்தார். கூட்டத்தைக் கலைக்க பொலிசார் பலத்தைப் பிரயோகித்தனர். அவர்கள் ஆர்பாட்டக்காரர்களிற்கு எதிராக இறப்பர் தோட்டாக்களை பயன்படுத்தியமையால் மூன்று ஆர்பாட்டக்காரர்கள் மரணித்தனர்.

ஆ.வி.மு இன் தலைவர் அரசாங்கத்தின் இச்செயல் மனித உரிமைகளின் மீறல் எனக் கருதுகிறார். அவர் அரசாங்கத்தின் செயலிற்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு ஒன்றை சமர்பிக்க விரும்புகிறார். அ.வி.மு இன் சட்ட ஆலோசகர் என உம்மை கருதுக. அரசாங்கத்தின் நடத்தையை எச்சட்ட அடிப்படைகளின் மீது கேள்விக்குட்படுத்தலாம் என விளக்கி ஒரு குறிப்பு ஒன்றை தயாரிக்குமாறு உம்மிடம் கோருகிறார். பொருத்தமான சர்வதேச மனித உரிமைகள் சட்ட உறுப்புரைகளைக் குறிப்பிட்டு, தலைவருக்கு அறிவுறுத்தி ஒரு குறிப்பை தயாரிக்க. உமது குறிப்பு அரசாங்கம் முன்வைக்கக்கூடிய வாய்ப்புள்ள எதிர்வாதங்களையும் விளக்க வேண்டும். செரண்டிப் ஆனது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேச சமவாயத்தையும் (ICCPR) , அதன் முதலாவது விருப்புரை ஆவணத்தையும் (First Optional Protocol) ஏற்று அங்கீகரித்துள்ளது எனக் கருதுக.

**(25 புள்ளிகள்)**

ஆ) இதேவேளை மரணித்த ஆர்பாட்டக்காரர் ஒருவரது தந்தையான எஸ்கோபர் என்பவர் உம்மை நாடி , மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு ஒன்றை சமர்ப்பிப்தற்கான சாத்தியத்தை நாடுகிறார். உள்நாட்டு நீதித்துறை தன் சமூகத்திற்கு எதிரானது என அவர் நம்புவதால், இதனை உள்நாட்டு நீதிமன்றின் முன் கொண்டு செல்ல அவர் தயங்குகிறார். இதனாலான ஏதேனும் விளைவுகள் குறித்து அவர் அச்சமுறுவதால், இம்முறைப்பாடு குறித்து அவரது பெயர் வெளிப்படுத்தப்படாமல் மேற்கொள்ளவும் விரும்புகிறார். மேலும் அவர் மனித உரிமைகள் ஆணைக்குழு அவர் சார்பாக தீர்மானிப்பின் அவரிற்கு ஏதேனும் நிவாரணமளிக்க செரண்டிப் அரசாங்கம் பிணிக்கப்பட்டுள்ளதா என்றும் அறிய விரும்புகிறார். பொருத்தமான பொருத்தணை உறுப்புரைகள் மற்றும் நீதியியல் எடுத்துக்காட்டுக்கள் என்பனவற்றைக் குறிப்பிட்டு எஸ்கோபரிற்கு அறிவுறுத்துக. செரண்டிப்பின சட்டமுறைமை இலங்கையை ஒத்தது எனக் கருதுக.

**(15 புள்ளிகள்)**

**(40 புள்ளிகள்)**

## பகுதி-ஆ

2. *தாரணி* என்பது சேலங்காவின் கிராமபுற சமூகங்களின் விருத்திக்காக பணியாற்றும் ஒரு சமூகம் சார் சிவில் சமூக தாபனம் ஆகும். சேலங்கா பலவீனமான பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு விருத்தியடைந்து வரும் நாடு ஆகும். சேலங்காவில் அண்மைக் காலமாக எழுந்துள்ள மிக முக்கியமான ஆரோக்கியம் சார் பிரச்சினையொன்று பல கிராமவாசிகளின் உயிரிற்கு ஆபத்தாக அமைந்துள்ள தீவிர சிறுநீரக செயலிழப்பு நோயின் பரவல் ஆகும். விவசாயத்தில் அதிகமாக பயன்படுத்தப்படும் இரசாயன உரங்களே இந்நோய் பரவலின் பின்னுள்ள முக்கிய காரணியாக குறிப்பிடப்பட்டு விஞ்ஞான தரவு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நோய் காரணமாக கிராமவாசிகள் முகங்கொடுக்க நேரிட்டுள்ள சுகாதார பிரச்சினைகள் குறித்து *தாரணி* அக்கறைக் கொண்டுள்ளது. இது, தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களுடனான உரப்பாவனையை ஒழுங்குபடுத்துமாறு அரசாங்கத்தை தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. அரசாங்கம் இக்கோரிக்கைகளைப் புறக்கணித்து தொடர்ந்தும் தீங்கு விளைவிக்கும் உரங்களை இறக்குமதி செய்து வந்தது. மேலும் இக்கிராமப்புறங்களில் நிலவும் கடும் சுகாதார பராமரிப்பு பற்றாக்குறை குறித்து *தாரணி* அதிருப்தியுற்றுள்ளது. சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ள மக்களிற்கு குறிப்பிட்ட சிகிச்சை தேவைப்படுகிறது. ஆயின் கிராமப்புற வைத்தியசாலைகளில் இச்சிகிச்சைக்கான வசதிகள் வழங்கப்படுவதற்கான அவசிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என *தாரணி* முறையிடுகிறது. மேலும் இத்தாபனம் அரசாங்கத்தின் சுகாதார பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கீடு கடந்த சில வருடங்களில் அதிகமாகக் குறைந்துள்ளது என்றும் குறைசாட்டுகிறது. இக்கோரிக்கைகளிற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் சேலங்கா ஒரு வறிய நாடு என்றும் , அது குறிப்பிட்ட சிகிச்சை நடவடிக்கைகளை வழங்குவதற்கான அவசிய வளங்களைக் கொண்டில்லை என்றும் குறிப்பிடுகிறார். அவர் மேலும் தெரிவிக்கும் போது ஒரு வறிய நாடாக சேலங்கா அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்க வேண்டியுள்ளதுடன் , அதனால் பாதை நிர்மாணம் போன்ற அபிவிருத்தி சார் திட்டங்களிற்கே நிதி ஒதுக்கீட்டின் போது அவர்கள் முன்னுரிமை அளிப்பதாகவும் கூறுகிறார்.

(அ) சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பிண்ணனியில் அடையத்தகு அதியுயர் சுகாதார தராதரத்தின் உரிமையுடன் தொடர்புறுத்தி சேலங்காவின் மனித உரிமைகள் கடப்பாடுகளை ஆராய்க. பொருத்தமான சர்வதேச மனித உரிமைகள் சட்ட ஆவணங்கள் மற்றும் பொருத்தணைகளின் கீழான அமைப்புகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நோக்குகள் மற்றும் பொது கருத்துக்கள் என்பனவற்றை உமது ஆய்வில் குறிப்பிட வேண்டும்.

**(12 புள்ளிகள்)**

(ஆ) சேலங்காவின் சட்டமுறைமை இலங்கையை ஒத்தது எனக் கருதுக. கிராமவாசிகளது சுகாதார உரிமை மீறப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை *தாரணியால்* முன்வைக்க முடியுமா? அடிப்படை உரிமைகள் சட்டவியல் கருத்தேற்பினுள் சுகாதாரத்திற்கான உரிமை முதலானவற்றைக் கொணர உம்மால் ஏதேனும் சட்ட பொறிமுறை ஒன்றை பரிந்துரைக்க முடியுமா?

**(08 புள்ளிகள்)**

**(20 புள்ளிகள்)**

3. '… நாடுகள் ஆணைக்குழுவின் அங்கத்துவத்தை மனித உரிமைகளை உறுதி செய்வதற்காக அன்றி , விமர்சனங்களில் இருந்து தம்மை பாதுகாக்கவும் , மற்றையவற்றை விமர்சிப்பதற்காகவும் நாடியுள்ளன. இதன் விளைவாக , நம்பகத்தன்மை குறைபாடு விருத்தியுற்று ஐக்கிய நாடுகள் முறைமையின் ஒட்டு மொத்த நற்பெயரிற்கு களங்கம் ஏற்படுகிறது'

- Kofi Annan (Former UN General Secretary, 2005)

2006 இல் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, அதன் கண்காணிப்பு பொறிமுறையானது ஆற்றல் அற்ற ஒன்றாகக் கருதப்பட்டமையால் அதனை பதிலீடு செய்வதற்காக மனித உரிமைகளிற்கான ஐக்கிய நாடுகள் மன்றம் (UNHRC) ஆனது ஸ்தாபிக்கப்பட்டது. மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு என்பன தொடர்பில் மனித உரிமைகளிற்கான ஐக்கிய நாடுகள் மன்றம் எவ்வாறு தொடர்புறுகிறது என விளக்குக. மனித உரிமைகள் பாதுகாப்பிற்கான சர்வதேச முறைமையை மேம்படுத்துவதில் மனித உரிமைகளிற்கான ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உருவாக்கம் பங்காற்றியுள்ளதா என நுணுக்கமாக ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

4. சோமன் என்பது பழமைவாத கலாசார கூறுகளை உறுதியாகக் கொண்ட ஒரு தீவு ஆகும். பராம்பரியமாக , சோமனின் உயர்கல்வித்துறை ஆண் மாணவர்களிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. 1990 கள் வரை , பெண்கள் பல்கலைக்கழகங்களிற்கு செல்வதை தடை செய்யும் சட்டம் ஒன்றும் காணப்பட்டது. நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானளவு மட்டும் பெண்கள் கற்க வேண்டும் என்ற சமூகத்தின் ஆதிக்க மனப்பாங்கை இச்சட்டம் பிரதிபலித்தது. பெண்கள் தொழில் சார்ந்து பணியாற்றுபவர்களாவது விரும்பத்தகாத ஒன்றாகக் கருதப்பட்டது. சிறந்த வீட்டு மனைவியர்களாக இருப்பதுவும் , பிள்ளைகளை வளர்ப்பதுவும் பெண்களது முக்கிய பங்காகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் 1990 களில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஆனது பெண்களது உரிமைகளை மேம்படுத்தும் எண்ணத்துடன் , பெண் மாணவர்கள் பல்கலைக்கழகங்களிற்கு செல்வதை அனுமதிக்கத் தீர்மானித்தன. அது முந்தைய சட்டத்தை நீக்கியதுடன் , பல்கலைக்கழக அனுமதியை பெண் மாணவிகளிற்கும் அனுமதித்தது. எவ்வாறாயினும் இத்தீர்மானத்தின் பின்னும் பெண்கள் பல்கலைக்கழகங்களில் சேர்வதில் பெரும் விருத்தி ஏற்படவில்லை. 2020 இல் நடாத்தப்பட்ட ஒரு ஆய்வில் பல்கலைக்கழக மொத்த மாணவர் தொகையில் 10% மாத்திரமே பெண்கள் காணப்படுவதாக கண்டறியப்பட்டது. இவர்களுள் பெரும்பான்மையானோர் நகர்புற நடுத்தர வர்க்கக் குடும்பங்களைச் சேர்ந்தோர் ஆவர். கிராமபுறங்களில் இருந்தான பெண் பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானது என்றும் இவ் ஆய்வு வெளிப்படுத்தியது. கிராமப்புறங்களில் பராம்பரிய கலாசார விதிகள் மிக உறுதியாக இருந்ததுடன் , அங்கு இன்றும் பெண்கள் உயர்கல்விக்கான அனுமதி நாடுதல் முறையற்றது என்றும் நம்பப்பட்டது. அரசாங்கம் , தாம் உயர்கல்வியில் பெண்களது பங்கெடுப்பை மேம்படுத்த தமது சிறந்த செயற்பாட்டை மேற்கொண்டுள்ளதாகக் கூறுகிறது. ஆவர்கள் தடையை நீக்கியமையை சமத்துவத்தை மேம்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைக்கான உதாரணமாக குறிப்பிடுகிறனர்.

பெண்களிற்கான சம உரிமைகளிற்காக பிரச்சாரம் செய்யும் மனித உரிமைகள் ஆர்வலராக உம்மை கருதுக. மேலும் சோமன் பெண்களிற்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கையை (CEDAW) ஏற்று அங்கீகரித்து உள்ளதாகவும் கருதுக. பெண்களிற்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கையின் உறுப்புரைகளின் பின்னணியில் , உயர்கல்வித்துறையில் பெண்களது சம உரிமைகளை சோமன் எந்தளவு உறுதி செய்துள்ளது எனக் கணிக்க. உயர்கல்வித்துறையில் பெண்களது உரிமைகளது நிலையை விருத்தி செய்ய அரசாங்கத்திற்கு நீர் முன்வைக்கும் பரிந்துரைகள் எவை?

**(20 புள்ளிகள்)**

5. (அ) சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) உருவாக்கமானது , சர்வதேச குற்றங்களிற்கான பொறுப்புடைமையை உறுதி செய்யும் பயணத்தின் ஒரு மைல்கல் ஆகும். எவ்வாறாயினும் சர்வதேசக் குற்றங்களிற்கான வழக்கு தொடர்தலிற்கு வரலாற்று முன்னுதாரணம் காணப்படுகிறது. 1990 இல் ஐக்கிய நாடுகளின் இடைக்கால நியாயசபைகளான (UN *ad hoc* tribunals) ; முன்னைய யுகோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை (ICTY) மற்றும் ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை (ICTR) என்பன இச்சட்டப்பகுதியின் விருத்தியில் முக்கியமான நிகழ்வுகள் ஆகும். ஐக்கிய நாடுகளின் இடைக்கால நியாயசபைகள் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்பனவற்றுக்கு இடையிலான வேறுபாட்டின் மீது சிறப்புக் கவனம் செலுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் என்பனவற்றை ஆராய்க.

**(12 புள்ளிகள்)**

(ஆ) '… உரோம் சட்டத்தை (2002) ஏற்று அங்கீகரிக்காத நாட்டின் ஏதேனும் அதிகாரியின் நடத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு குறித்துரைக்க முடியாதது ஆகும். அவர்களது நடத்தை சர்வதேச குற்றவியல் நியாயாதிக்கத்தில் இருந்து முழுமையாக விடுபட்டது ஆகும்'

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உரோம் சட்ட உறுப்புரைகளை எடுத்துக்காட்டி உமது விடையை நியாயப்படுத்துக.

**(08 புள்ளிகள்)**

**(20 புள்ளிகள்)**

*பதிப்புரிமை பெற்றது*